தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 231/ந/2022
நாள் 22.12.2022

திரு. P.S.சுதாகரன்,
கோவில்பட்டி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி. – எதிர் மனுதாரர்

கோவில்பட்டி, தனுஷ்கோடியாபுரம் தெரு, கதவு எண்.153/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.S.சுதாகரன் என்பவரின் 18.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2022 அன்று பெறப்பட்டு 231/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோவில்பட்டி, தனுஷ்கோடியாபுரம் தெரு, கதவு எண்.153/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.S.சுதாகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் இந்திய அரசியலமைப்பு சட்டம் 1950 கோட்பாடு 19(1) மற்றும் 51(A) அடிப்படையாகக் கொண்டு இந்த மேலான கோரிக்கை மனுவை தங்களின் பார்வைக்கு வைக்கிறேன். கடந்த 25.01.2021 அன்று கோவில்பட்டி நகரில் உள்ள மந்தித்தோப்பு சாலையில் உள்ள பல திருமண மண்டபங்களில் ஒன்றான ஜெய் ஸ்ரீ திருமண மண்டபத்தில் முறையான வாகன நிறுத்துமிடம் மற்றும் அவசர வழி இல்லாத நிலையில் உள்ளதால், அந்த திருமண மண்டபத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும் போது சாலையில் தேவையில்லாத போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்களுக்கு வீண் சிரமபட வேண்டிய நிலையில் அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கக் கோரி கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் மனு செய்ய சென்றேன். (கடந்த 11.02.2020 அன்று கோவில்பட்டி வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் அனைத்து திருமண மண்டபங்களும் முறையான வாகன நிறுத்துமிடம் மற்றும் திருமண மண்டபத்தின் முன்பாக No parking என்ற பலகை வைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது அதில் நகராட்சி சார்பில் கட்டுமான ஆய்வாளர் கலந்து கொண்டுள்ளார்). தமிழ்நாடு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஏ) துறையின் கடிதம் எண் 6112/ஏ2/2018–3 (03.04.2018) மற்றும் அரசானை எண். 73/2018 நாள் (11.06.2022)படி மனு ரசீது கோரிய போது மனுவுக்கு ரசீது அளிக்கும் பழக்கம் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் கிடையாது என்றும் ரசீது வேண்டும் என்றால் பதிவு அஞ்சல் வழியாக அனுப்புங்கள் என்று

கூறினார்கள். அதன் அடிப்படையில் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் செய்தேன். அதனை 27.01.2021 அன்று பெற்றுக்கொண்ட நகராட்சி நிர்வாகம் இன்று வரை மனு மீது எடுத்த நடவடிக்கை குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை என் மனு மீது எடுத்த நடவடிக்கைகளை பல முயற்சிகளை மேற்கொண்டும், நடவடிக்கை குறித்து எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை, இந்நிலையில் என் மனுவின் மீது எடுத்த நடவடிக்கை குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6 (1)ன்படி எனது மனு மீது எடுத்த நடவடிக்கை குறித்தும் மற்றும் சில தகவல்கள் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். அதனை கடந்த 23.12.2021–ல் பெற்றுக்கொண்ட பிறகும், அதற்கும் எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. அதற்கு மேல்முறையீடு செய்திருந்தேன் அதற்கும் பதில் கிடைக்கவில்லை என்பதால், மாநில தகவல் ஆணையத்தில் புகார் அளித்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலரிடம் அதே தகவல்களை கோரி கடந்த 11.04.2022 மனு செய்தேன். அது, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6 (3) படி கோவில்பட்டி நகராட்சி பொது தகவல் அலுவலருக்கு கடந்த 12.04.2022 அன்று மாற்றம் செய்யப்பட்டது. அதற்கு முழுமையான தகவல் அளிக்கவில்லை என்பதால் மாநில தகவல் ஆணையத்திடம் மீண்டும் மேல்முறையீடு செய்திருந்தேன். இதற்குண்டான வழக்கு கடந்த 27.07.2022 அன்று நடந்த போது தற்போது கையில் முழுமையான தகவல் இல்லை என்றும், சில நாட்கள் அவகாசம் தேவை என்றும் கோரியதால் கடந்த 03.08.2022 அன்று விசாரணை நடைபெற்றது. அதன் பின்னரும் முழுமையான தகவல் அளிக்கவில்லை. கடந்த 27 ஜனவரி 2021–ல் பெற்றுக்கொண்ட மனுவின் மீது எடுத்த நடவடிக்கை குறித்து இதுவரை எவ்வித தகவல் அளிக்கவில்லை. ஆகையால் என் மனுவை ஏற்றுக் கொண்டு உரிய விசாரணை செய்து என் மனு மீது எடுத்த நடவடிக்கையை எனக்கு அளிக்க வழிவகை செய்திடக்கோருகிறேன். என் மனு மறுக்கப்பட்டால் அதனை மாண்பமை உச்சநீதி மன்றம் Crl. App. No.19/2003, 28.04.2009 நாளிட்ட தீர்ப்பில், ''தீர்ப்பின் காரணங்களை கூற மறுப்பது, நீதி மறுப்பிற்கு சமம்'' என உத்தரவிட்டதன் அடிப்படையில், அதற்கான காரணங்களை, தயவுகூர்ந்து வழங்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 02.12.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''திரு.பி.எஸ்.சுதாகரன் என்பவரின் 27.01.2021 நாளிட்ட மனுவிற்கு, கோவில்பட்டி நகராட்சியின் கடிதம் நாள் 19.02.2021 மூலம் திருமண மண்டப உரிமையாளருக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. இதன் விவரம் கோவில்பட்டி நகராட்சியின் 04.05.2021 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி கோவில்பட்டி நகராட்சியால் வழங்கப்பட்ட தகவல் தனக்கு திருப்தியாகவில்லை என சென்னை, மாநில தகவல் ஆணையருக்கு மேல்முறையீடு செய்யப்பட்டதின் தொடர்ச்சியாக 03.08.2022 அன்று மாநில தகவல் ஆணையரின் காணொளி காட்சி மூலம் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் மாநில தகவல் ஆணையர் வழங்கிய ஆணையில் மனுதாரருக்கு கீழ்கண்ட மூன்றிற்கு தகவல் வழங்க உத்தரவிட்டார்.

- மந்திதோப்பு சாலை ஜெயஸ்ரீ திருமண மண்டபத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி.
- கோவில்பட்டி நகராட்சிக்கு வரப்பெறும் மனுக்கள் தொடர்பாக கோவில்பட்டி நகராட்சியால் வழங்கப்படும் தகவலுக்காக செலவிடும் செலவினம்.
- கோவில்பட்டி நகராட்சி பகுதியில் நீரோடை புறம்போக்கு, அதன் சர்வே எண், பரப்பளவு மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக.

மேற்காணும் உத்தரவின்படி, மனுதாரர் திரு.பி.எஸ்.சுதாகரன் என்பவருக்கு மேற்காணும் தகவல்கள் கோவில்பட்டி நகராட்சியின் 08.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டது.

இந்நேர்வில் மாநில தகவல் ஆணையரால் ஏற்கெனவே முடித்து வைக்கப்பட்ட மனுவினை தற்பொழுது மனுதாரர் மாவட்ட ஆட்சியருக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் மற்றும் தமிழ்நாடு மனித உரிமை ஆணையாளருக்கும் மீள சமர்ப்பித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு மனுவிற்கும் தகவல் வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரமும் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரும் 05.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.11.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. P.S.சுதாகரன், 05.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கோவில்பட்டி நகராட்சி மந்தித்தோப்பு சாலையில் உள்ள பல திருமண மண்டபங்களில் ஒன்றான ஜெய் ஸ்ரீ திருமண மண்டபத்திற்கான முறையான வாகன நிறுத்த இடம் இல்லை. மேற்கண்ட திருமண மண்டபத்தில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அங்கு மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆம்புலன்ஸ் போன்ற அவசர வாகனங்கள் அவ்வழியே செல்வதற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. இது குறித்து நகராட்சி ஆணையர், நகராட்சிகளின் மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் பதில் ஏதும் இல்லை. கோவில்பட்டி நகராட்சியில் மேற்கண்ட மண்டபத்திற்கான வாகன நிறுத்துமிடம் குறித்த தகவல்களை 25.1.2021 நாளிட்ட மனுவில் கேட்கப்பட்டும் எனக்கு விவரங்களை நகராட்சியால் அளிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட விவரங்களை எனக்கு அளிக்கவும் முறையாக தகவல்களை அளிக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் 05.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கோவில்பட்டி நகராட்சி மந்தித்தோப்பு சாலையில் உள்ள ஜெய் ஸ்ரீ திருமண மண்டபத்திற்கான வாகனங்கள் நிறுத்தும் இடம் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரியுள்ள விவரங்கள்26.4.2021 நாளிட்ட நகராட்சி கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டுவிட்டது. மேற்கண்ட கடிதம் சாதாரண தபாலில் அனுப்பப்பட்டுள்ளது, மேலும் மனுதாரரால் 25.01.2021 அன்று வழங்கப்பட்ட மனுவிற்கு நகராட்சியால் வழங்கப்பட்ட விவரங்களை இன்னும் ஓரிரு தினங்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட திருமண மண்டபத்திற்கான வாகன நிறுத்துமிடம் மண்டபத்தின் பக்கவாட்டில் இடவசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அது போதுமானதாக இல்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 2.12.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியை சார்ந்த மனுதாரர் திரு. P.S.சுதாகரன் என்பவர் தனது 18.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட மந்தித்தோப்பு சாலையில் அமைந்துள்ள ஜெயஸ்ரீ திருமண மண்டபம் போதிய வாகன நிறுத்த வசதி இல்லாமலும் மற்றும் அவசர வழி இல்லாமலும் செயல்படுவதால் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுவதாக 25.01.2021 நாளிட்ட மனுவில் கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு புகாராக அனுப்பியதில், அப்புகாருக்கு எவ்வித பதிலும் கோவில்பட்டி நகராட்சி மூலம் தன்னால் பெறப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

மேற்காணும் மனுதாரரின் 25.01.2021 நாளிட்ட மனு நகராட்சிக்கு வரப்பெற்றதும் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் 19.02.2021 நாளிட்ட இரு அறிவிப்புகளின் மூலம் ஜெயஸ்ரீ திருமண மண்டபத்தில் 31.12.2020 அன்று அனுமதியின்றி புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சி நடத்தப்பட்டதா என்பது குறித்தும் மற்றும் கட்டட விதிகளுக்குட்பட்டு வாகன நிறுத்துமிடம் மற்றும் அவசரவழி அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதா என்பதற்கான விவரத்தையும் மற்றும் திருமண மண்டபத்திற்கான கட்டட அனுமதி பெற்ற வரைபடத்தினையும் அனுப்பிடுமாறு திருமண மண்டப உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

திருமண மண்டப உரிமையாளரிடம் கோரியுள்ள மேற்காணும் விவரத்தினை கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரின் 26.04.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரான திரு. P.S.சுதாகரன் என்பவருக்கு தகவலாக சாதாரண தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நகராட்சியில் கையாளப்படும் Despatch Register நகலின் மூலம் அறியமுடிகிறது.

கோவில்பட்டி நகராட்சி மூலம் சாதாரண தபாலில் அனுப்பப்பட்ட 26.04.2022 நாளிட்ட அறிவிப்பு மனுதாரருக்கு கிடைக்கப் பெறாததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ், மனு, முதல் முறையீட்டு மனு மற்றும் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கும் இரண்டாவது முறையீட்டு மனுக்களை சமர்ப்பித்துள்ளார். தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய, ஆணையரின் 03.08.2022 நாளிட்ட ஆணையின்படி, பிறவற்றுள், கோவில்பட்டி, மந்திதோப்பு சாலையிலுள்ள ஜெயஸ்ரீ திருமண மண்டப கட்டடத்திற்கு கோவில்பட்டி நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட கட்டட வரைபட நகல் மனுதாரான திரு. P.S.சுதாகரன் என்பவருக்கு 08.08.2022 அன்று வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரர் கோவில்பட்டி நகராட்சிக்கு சமர்ப்பித்த 25.01.2022 நாளிடப்பட்ட மனுவில் தெரிவித்துள்ள புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நகராட்சி ஆணையரின் 26.04.2021 நாளிடப்பட்ட அறிவிப்பு 04.05.2021 அன்று நகராட்சியால் சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சாதாரண தபாலில் அனுப்பப்பட்ட பதில் கடிதம் மனுதாரருக்கு கிடைக்கப் பெறாமையால் மீண்டும் 26.04.2021 நாளிட்ட அறிவிப்பு 9.12.2022 அன்று கடிதம் மூலம் ஒப்புகை அட்டையுடன் பதிவு தபாலில் மீண்டும் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை நகராட்சியின் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரரின் 25.01.2022 நாளிட்ட புகார் மனுவிற்கு ஜெயஸ்ரீ திருமண மண்டப உரிமையாளரிடம் தகவல்கள் கோரியுள்ள விவரம் குறித்து நகராட்சியின் 26.04.2021 நாளிட்ட அறிவிப்பு 04.05.2021 அன்று மனுதாரரின் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பியதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள நிலையில், அவ்வறிவிப்பு கிடைக்கப் பெறாததால், மனுதாரர் 20.10.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கேட்டும், உரிய தகவலை நகராட்சியால் வழங்கப்படாமல், இறுதியில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மனுதாரர் முறையிட்ட பின்னர் 08.08.2022 நாளிட்ட நகராட்சியின் அறிவிப்பு மூலம் மனுதாரர் கோரிய தகவல் அனுப்பப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. இவ்வாறு மனுதாரர் கோரும் தகவலை 1 ½ வருடங்கள் கடந்த பின்னர் அளிக்கப்பட்டுள்ள செயலானது கோவில்பட்டி நகராட்சியின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தங்களது அலுவலகப் பணியில் மெத்தனுத்துடன் கூடிய அலட்சியப் போக்கினையே காட்டுகிறது. இவ்வாறு மனுதாரருக்கு தகவல்கள் சென்றடைந்துள்ளதா என்பதை ஊர்ஜிதம் செய்யாமலும், மிகவும் காலம் கடந்தும் தகவல்கள் அளித்துள்ள பொறுப்பற்ற முறையில் பணிபுரிந்துள்ள சம்பந்தப்பட்ட கோவில்பட்டி நகராட்சியின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P.S.சுதாகரன்,
கதவு எண்.153/4, தனுஷ்கோடியாபுரம் தெரு,
கோவில்பட்டி – 628 501.

2) ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி– 628 501, தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக